அவர்கள் கேட்டிருந்தும், அதை
அவர்கள் புறக்கணித்திருந்தால்,
அவர்கள் நரகத்திற்குத்தான்
போவார்கள், புறம்பான இருளில்
தள்ளப்பட்டிருப்பார்கள்,
ஏனெனில் அவர்கள் வசனத்தை
புறக்கணித்தபடியினால்
இப்படியாகி இருக்கும். ஆனால்
அவர்கள் ஒருபோதும்
கேட்டேயிராவிட்டால்,
அப்பொழுது தேவன்
நீதியுள்ளவராயிருக்கிறார்;
உபத்திரவ காலமானது
அவர்களுக்கு வருகிறது

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

### செய்தி: இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும்

THRONE OF MERCY AND JUDGEMENT

ஜனவரி 8, 1961 பிரான்ஹாம் கூடாரம் இந்தியானா, அமெரிக்கா

**199.** இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் 15ம் அதிகாரத்தில், ஸ்திரீயின் சந்ததியாகிய மீதியானவர்கள் உபத்திரவ காலத்து பரிசுத்தவான்கள் ஆவர்; அவர்கள் உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து செல்லுகிறார்கள், அவர்கள்

இந்தக் கடலின் மேல் நின்று கொண்டிருப்பதாகக் காணப்பட்டார்கள். அது அக்கினிமயமாக, இரத்தத்தால் நிறைந்து, சிவப்பான தீ நாவுகள் உள்ளதாக, தேவ அக்கினியானது எரிந்து கொண்டிருந்தது. பாருங்கள். அவர்கள் ரோமாபுரியாகிய மிருகத்தின் மேலும், அவனது இலக்கத்தின் மேலும், அவனது பெயரின் எழுத்துக்களின் மேலும், அவனது சொரூபமாகிய சபைகளின் சமஷ்டி அமைப்பின் மேலும் ஜெயங் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதைவிட்டு வெளியே வந்து

விட்டார்கள். இந்த உபத்திரவகாலத்து பரிசுத்தவான்களாகிய இக்குழுவினரான மக்களை வெளியே கொணருவதற்காக, இஸ்ரவேலுக்காக தோன்றவிருக்கும் அந்த இரு தீர்க்கதரிசிகளாகிய மோசேயும் எலியாவும் செய்கிற பிரசங்கத்தின் மூலமாக அவர்கள் கொண்டுவரப்படுவார்கள்.

**200.** பாருங்கள், இப்பொழுது சபையானது எடுத்துக்கொள்ளப் பட்டாகிவிட்டது. இது நடக்கையில் கிறிஸ்துவின் மனைவியானவள் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறாள்

என்பதை நினைவில் கொள்ளுங்கள். உபத்திரவ காலமானது... நகரத்தினுள் தனது இராஜாக்களையும், அவர்களுடைய எல்லா மகிமைகளையும் கொண்டு வந்திருக்கிறாள். நாம் வெளிப்படுத்தின விசேஷம் 22ம் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும்போது நீங்கள் அதைக் காணலாம். இதை நீங்கள் எழுதிக் குறிப்பெடுத்து வைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டே வந்தால், அதைப்பற்றி நாம் பார்க்கையில், நமக்கு அதின் அர்த்தம் என்ன என்பதை கண்டுகொள்ளலாம்.

அதனுடைய உன்னதமான இடங்களைத் தொடுவதற்கு நமக்கு நேரம் இல்லை. பிறகு, ஏதாவது ஒரு நாளில், ஒருவேளை கர்த்தருக்கு சித்தமானால், அதைப்பற்றி பேசுவதற்கு நமக்கு ஏராளமான தருணம் உண்டாயிருக்கும்.

201. இப்பொழுது எழும்பிவந்த உபத்திரவ காலத்து பரிசுத்த வான்கள், மகா உபத்திரவ காலத்திற்குள் கடந்து வந்திருக்கிறார்கள். சபையானது உபத்திரவ காலத்தினுள் போகாது. அவர்கள் ஏற்கனவே மகிமையில்

இருக்கிறார்கள் என்பதைக் காண்கிறீர்களா? இதோ இங்கே உபத்திரவ காலத்து பரிசுத்தவான்கள் பரிசுத்த மாக்கப்பட்டவர்களாய் .... என்னுடையதும் உங்களுடையதுமான தவற்றினால் அவர்கள் ஒருபோதும் வசனத்தை கேட்காதவர்களாய் இருந்தார்கள். அவர்கள் கேட்டிருந்தும், அதை அவர்கள் புறக்கணித்திருந்தால், அவர்கள் நரகத்திற்குத்தான்

போவார்கள், புறம்பான இருளில் தள்ளப்பட்டிருப்பார்கள், ஏனெனில் அவர்கள் வசனத்தை புறக்கணித்தபடியினால் இப்படியாகி இருக்கும். ஆனால் அவர்கள் ஒருபோதும் கேட்டேயிராவிட்டால், அப்பொழுது தேவன் நீதியுள்ளவராயிருக்கிறார்; உபத்திரவ காலமானது அவர்களுக்கு வருகிறது.